ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

यथा ममात्मप्रियसंपदुद्यमस्तथा परेषा मथवा विशेषतः ।
अत्राप्नुयुश्चे न्मदविप्लवात् प्रियं न ते चरेयुः कथमात्मनः प्रियम्॥

நமக்கு எப்படி ஆத்துமப்பிரியத்தைத் தேட முயற்சி இருக்கின்றதோ? அதுபோலவே தான் பிறருக்குமிருக்கும். அல்லது அதிகமாகவுமிருக்கலாம். நமக்கு யாதொரு கெடுதியும் செய்யாமல் பிரியத்தை அடைவார்களானால் அவர்கள் ஆத்துமப்பிரியத்தைச் செய்தவர்களாக ஏன் ஆகமாட்டார்கள்! ஒவ்வொருவனும் ஆத்துமப்பிரியத்தைத் தேட முயற்சிக்கையில்—"நாம் பலபல ஆத்துமப்பிரியமுண்டாகப் பாடுபட்டுப் பிரயத்தினம் செய்வதுபோலவே பிறரும் பிரயத்தினம் செய்வார்கள் என்றும், அல்லது நம்முடைய பிரயத்தினத்திற்குமேல் அதிகப் பிரயத்தினம் செய்வார்களென்றும், எவனும் ஆத்துமப்பிரியத்தையடைய முயற்சிக்காமலிருக்கமாட்டானென்றும் நினைக்கவேண்டும். அப்படி நினைக்கையில் அன்னியர்கள் ஆத்துமப்பிரியத்திற்காகப் பாடுபட்டு வருகையில் அதில் நாம் எவ்விதக் கெடுதியும் செய்யக்கூடாது என்று கண்டிப்பாய் கவனிக்கவேண்டும். ஒருவனது பிரியத்தைக்கெடுத்து அடையும் பிரியம் பிரியமாகவே ஆகாது. அதையே பெரும் பிரியமாக ஒருவர் நினைப்பாரானால் அந்தப்பிரியம் நீடித்திருக்கமாட்டாது. ஒருவாறு நீடித்திருக்குமென்று பிரமித்தபடி சிலகாலம் நீடித்திருக்குமானாலும், காலாந்தரத்தில் அல்லது கண்டிப்பாய் ஜன்மாந்தரத்தில் தொடரவே மாட்டாது. ஒருவர் அடையும் பிரியமே நமக்கும் வேண்டுமென்று அபேக்ஷையுண்டானால் அப்பொழுது அதை அவர் அடையவொட்டாதபடி செய்யாமற்போனால் நாமெப்படி அதை அடையமுடியும்? ஆகவே அதைக் கெடுத்துத்தான் ஆகவேண்டுமென்று சிலருக்குத் தோன்றலாம். அது சரியான தோற்றமன்று. ஆத்துமபேதம் தோன்றினால் அவ்வளவு ஆத்துமாக்களும் தனித்தனியே பிரிய வஸ்துவை அடையும்படி அனேகப் பிரிய வஸ்துக்களை ஒரேமாதிரி இருக்கக் கூடியவைகளாகவும், பலவிதங்களிலிருக்கக் கூடியவைகளாகவும், பலவாறாகப் பரமேசுவரன் படைத்திருக்கிறார். அவைகளிருக்கவோ, அவைகளை அனுபவிக்கவோ தேசத்திற்குக்குறைவா? அகண்டப்ரம்மாண்டத்தில் பதினான்கு விதங்களாக அல்லவா லோகங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் மஹாவிசாலமாகயிருப்பதாக சாஸ்திரங்களில் காணப்படுகின்றது. அல்லது காலந்தான் கொஞ்சமா? ஆகவே கணக்கற்றகாலத்தில், அளவற்ற தேசத்தில் அவரவர்களும் தனித்தனியே ஒருவருக்கொருவர் இடஞ்சலே இல்லாமல் பிரியத்தையடையலாம். அதற்காக ஒருவர்பிரியத்தைக் கெடுக்கவேண்டுவதேயில்லை. காலம், தேசம், ஆத்துமா, ஜகத்து இவைகளில் பேதம் தோன்றும்வரையில் ஒன்றுக்கும் பஞ்சமில்லை. துவேஷத்தால் கெடுக்கலாமே தவிர கெடுத்துத்தான் ஆகவேண்டுமென்றதில்லை. ஆத்துமபேதம் தோன்றாவிடில் எவருக்குக் கெடுதிசெய்வது? கெடுதி செய்தாலும், பிரியம்செய்தாலும் தனக்குத்தான் செய்யவேண்டும். பிரியம் செய்யாமலிருக்க முடியாதென்றெண்ணி யாவரும் ஆத்துமப்பிரியத்திற்குப் பாடுபடுவார்களாக. சுபம்.

பத்திராதிபர்,

பிராம்மணர்வாழும் பாரதநாடு.

ஆர்யர்களின் வாஸஸ்தானமாகிய பாரதநாட்டுக்கு, ஸநாதன தர்மிகளுள் சிரோரத்தினமாய் விளங்கின பாதனென்னும் சக்கிரவர்த்தி, ஸநாதன தர்மிகளை ஸம்ரக்ஷித்துவந்தமையால் அந்தப் பெயர்வந்தது. ஸிருஷ்டிதொடங்கின நாள்முதல் பிரளயகாலம் வருமளவும் ஆர்யர்கள் வர்ணாசிரமதர்மத்தை அநுஷ்டிப்பதற்கு வஸதியுள்ள இடமாக ப்ரம்மதேவராலேயே ஏற்படுத்தப்பட்டது அதனால் இந்த பாரதபூமிக்குக் கர்மபூமியென்றம், புண்ணியபூமி என்றும், ஆர்யாவர்த்தமென்றும் பெயர்.

"कर्मभूमिरियं ब्रह्मन्" "आर्यावर्तः पुण्यभूमिः"

என்று புராண நிகண்டுக்களில் பிரஸித்தமாய் கூறப்பட்டது. ஆர்யர்களின் தர்மானுஷ்டத்திற்கென்று கொடுக்கப்பட்டவிடத்தில் கர்மாதிகாரமில்லாத பசு, பக்ஷி, முதலிய பிராணிகளும், செடி, கொடி முதலிய ஸ்தாவரவஸ்துக்களும், வந்திருப்பானேன். என்றால்கர்மானுஷ்டானத்திற்குதவவேண்டியதற்காகவாமென்க? கர்மங்களில் தர்ப்பம்—ஸமித்து—பால்—தயிர்—நெய்—முதலியவைகள் வேண்டியதாக விதிக்கப்பட்டிருப்பதால் அவைகள் இங்கு போடப்பட்டன. பாப ஜன்மங்களாகையால் நரகத்திற்றான் இருக்கவேண்டியவையாயினும், கர்மாவை ஆரம்பித்தபிறகு அங்கிருந்து கொண்டுவரமுடியாதாகையால் இவ்விடத்திலேயே ஸிருஷ்டிக்கப்பட்டன. ஒருவருக்கு ஒரு இடத்தைக்கொடுத்துவிட்டாலும், அவர்களுக்குதவிபுரியும் வேலையாட்களை அந்த இடத்தில் வைத்துக்கொள்ள சிபார்சுசெய்வது யுக்தமேயன்றோ. அதனாற்றான் கர்மாதிகாரம்பெறாத சில வகுப்புக்காரர்கள் இங்கு ஸிருஷ்டிக்கப்பட்டது ஸாக்ஷாத்தாகவோ—பரம்பரையாகவோ

கர்மாவுக்கு உதவிசெய்யவேண்டுமென்றகருத்தாலாம். அப்படி யிருக்கையில் கடந்த மார்கழிமாதத்தில் சென்னை பச்சையப்பன் கலாசாலையில் சிலர் கூடி ஆஸ்திகர்களை அளவுகடந்து தூற்றும் பொழுது "ஆர்யப்பார்ப்பனரை நாட்டைவிட்டு விரட்டவேண்டும்" என்று ஒருவர் பேசினாராம். இந்த நாடு யாருடையநாடு? எவர் வாழவேண்டியநாடு? என்பதை அவர் ஆலோசித்துப்பாக்கவில்லை. தீவட்டிக்கொள்ளைக்காரன் தெருவில்புகுந்து தெருவாரைவிரட்டும் கதையை யொத்ததாயிருக்கிறது இது. ஊராருக்கு இடைஞ்சல் செய்பவர்களை ராஜாங்கத்தார் அடக்குவதுபோல் இந்த நாஸ்திகர்களை நாடுகடத்தவேணும். ராஜாங்கத்தார் உபேக்ஷையாய் இருந்துவிட்டால் மேலுலகத்தார்கள்விடமாட்டார்கள். எதற்காக இவர்களை இங்கு ஸிருஷ்டித்தோம். கர்மாவுக்கு உதவிபுரியவேண்டியதற்காகவல்லவா இங்கு போட்டோம். அதற்கு நேர் விபரீதமாக நடப்பவர்களை நாடுகடத்துவதோடு நிறுத்தப்படாது. நரகத்திலேயேகொண்டு தள்ளவேண்டியது" என்றல்லவா பிரம்மாதி தேவர்கள் சட்டம் போட்டிருக்கிறார்கள். இராஜாங்கத்தார் காதில்விழுவதற்குள் ஒரே இராத்திரியில் திடீரென்று கொள்ளைக்காரன், வீட்டுக்காரனை அடித்து விரட்டுவதுபோல் இந்த நாஸ்திக கூட்டத்தார் ஆஸ்திகர்களை அடித்து விரட்டினாலும், பொழுது விடிந்தவுடன் வீட்டுக்காரன் வந்துவிடுவதுபோல் ஆஸ்திகர்கள் திரும்பிவரும்படி தேவலோகத்தார் வேண்டியவேலைசெய்வார்கள். அதற்காகத்தான் பாரத நாட்டிக்கு "ஆர்யாவர்த்தம்" என்று பெயர்போட்டார்கள்.

"आर्याः आवर्त्तते इति अर्यावर्तः । आर्या पुनःपुनरुद्भवन्तीत्यर्थः । न चिरं स्थातारो म्लेच्छाः इतियावत्"

"ஆர்யர்கள் எங்குமிருந்துவருவதால் இது ஆர்யாவர்த்தமெனப்படும். ஒருஸமயம் ஆர்யர்கள் வேறிடத்திற்கோ, வேறு லோகத்திற்கோ, சென்றாலும் அடிக்கடி இங்கு உண்டாவார்கள், மிலேச்சர்களும் இருப்பார்களேயென்றால் அவர்கள் நீண்ட காலம் நீடித்திருக்கமாட்டார்கள் எனக் கருத்தாம்" என்று மேதாதிதிவியாக்கியானஞ் செய்திருக்கிறார். க்ஷத்திரிய பரம்பரையைவிட்டு அநார்யர்கையிலகப்பட்ட பாரதபூமி ஒருவர் கையி

லேயே நிலைத்துநிற்காமல் பல கை மாறிமாறிவருவதே இதற்கு அத்தாக்ஷியாகும். ஆர்யநாட்டில்வந்து அநார்யர்கள் ஆர்யர்களை விரட்டநினைப்பது வீட்டு யஜமானனை வேலைக்காரன் விரட்ட நினைத்த கதையாயிருக்கிறது. யாரை எவர் விரட்டவேண்டியதோ தெரியவில்லை. ஆர்யர்கள் அடங்கியிருப்பதால்வந்த கேடுஇது. இதற்காக அவர்கள் ஸ்வபாவத்தை மாற்றிக்கொள்ளப்போகிறார்களா! இல்லை. என்னவந்தாலும் சாந்தநிலையில்தானிருப்பார்கள். ஒருவருக்கும் கெடுதல்செய்யக்கூடாதென்பது அவர்களது முக்யமான நோக்கம். ஸர்வேசுவரனது ஸத்திய ஸங்கல்பத்தினாலவர் வாழும் பூமியே அவருக்கு எப்பொழுதுமிருக்கும். சுபம்.

பத்திராதிபர்.

ஸ்ரீ நடேசஸ்துதி.

(6-வது பக்கத்தொடர்ச்சி.)

वाच्छा नैव कलासु शङ्कर तथा नैवास्तिकांक्षा श्रियां
नैवास्ते मम भोग्यवस्तु विषया तृष्णा च देवाधिप ।
किन्त्वाशा हि बलीयसी तव पदप्राप्तौ कृपावारिधे
तस्मा त्प्रापय तावकं पदमिमं त्वत्पादसंपूजकम् ॥५६॥

ஓ சங்கரா! எனக்கு வித்தைகளில் ஆசை இல்லை. சம்பத்தி லும் ஆசையில்லை. மாலை, சந்தனம் ஸ்திரீ முதலான போக்ய வஸ்துக்களிலும் ஆசையில்லை. ஓ தேவநாயக! உம்முடைய சரணத்தை அடைவதில் பலமான ஆசை இருக்கின்றது. ஓ கருணைக்கடலே! ஆகையால் உம்முடைய சரணத்தைப் பூஜிக்கின்ற என்னை உம்முடைய சரணத்தை அடையச்செய்யும். (56)

स्वामिन् मामकमानसं नटपते दुःखाग्निना दह्यते
चिन्ता चैवदिने दिने मनसि मे नानाविधा जायते ।
दीनोऽहं कमिहाश्रये यमपरं त्वामन्तरेण प्रभुं
स्वप्ने वा मम सन्निधाय सहसा कर्तव्यमाज्ञापय ॥५७॥

ஓ ஸ்வாமின்! நடநாயக!! என்னுடையமனம் துக்காக்னியால் பொசுக்கப்படுகின்றது. தினந்தினம் நாநாவிதமான சிந்தையும்

உண்டாகின்றது. துக்கத்தை நிவர்த்திப்பதில் சமர்த்தரான உம்மைவிட்டு வேறு எவரை மூடனான நான் அடைவேன். ஸ்வப்நத்திலாவது வந்து எனக்கு செய்யவேண்டியதை ஆஜ்ஞை செய்யும்.

चिता चिन्ता तयोर्मध्ये चिन्ता नाम गरीयसी ।
सजीवं दहते चिन्ता निर्जीवं दहते चिता ॥

சிதை சிந்தை இவைகளுக்குள் சிந்தையே மேலானது. ஏனென்றால் சிந்தை ஜீவனோடுகூடிய சரீரத்தை பொசுக்குகின்றது. சிதாக்னி ஜீவனில்லாத சரீரத்தைப் பொசுக்குகின்றது, என்ற நீதிவாக்யப்படி சிந்தை மிகவும் துக்ககரீ. இவ்வாறே ஒளவையார் நல்வழியில் கூறுகின்றார்.

வருந்தியழைத்தாலும் வாராதுவாரா
பொருந்துவனபோமினென்றாற் போகா—விருந்தோங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம்தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர்தொழில்.

தமக்கு வாராதவைகள் வருந்தி அழைத்தாலும் வாராவாம். தமக்கு வருமவைகள் போமின் என்று வெறுத்தாலும் போகாவாம். இவ்வுண்மையை அறியாமல் ஏக்கமுற்று மனம் புண்ணாகும்படி அவைகளைத் தாங்கள் நீடித்தகாலம் முடிவின்றி சிந்தித்து மாண்டுபோவதே மனிதருடைய தொழிலாகும். ஆதலால் சிந்தா துக்கத்தை விலக்குவதற்கு ஈசனுடைய அருளே காரணமாகுமென்பதை இந்த ஸ்துதியால் ஸ்துதி கர்த்தா நிரூபிக்கின்றார்.(57)

कुर्वन् दीक्षितवंशजेषु करुणामन्यैरलभ्यां सदा
भक्ताभीप्सितमादरान्नटपति स्संपूरय न्प्रत्यहम् ।
चेतस्सद्मनियोगिनां च वसतिं बोधप्रदीपान्विते
तन्वन् दीनदयानिधिर्विजयतां तारेशचूडामणिः ॥५८॥

தில்லையில் தீக்ஷிதர்களென்ற பிராம்மணோத்தமர்களின் வம்சத்தில் ஜநித்த மனுஜர்களிடத்தில் அன்யர்களுக்கு மிகவும் துர்லபமான தயையைச் செய்கின்றவரும் தினம்தினம் பக்தர்களுடைய இஷ்டங்களைப் பூர்த்தி செய்கின்றவரும் அறிவாகிறவிளக்குடன்கூடிய யோகிகளுடைய மனோகிருஹத்தில் வாசஞ்செய்கின்றவரும் தீனதயாநிதியும் சகல ஜனங்களுக்கும் சந்தோஷத்தைத்தருகின்ற

சந்திரனை சிரஸில் தரிப்பவருமான நடநாயகர் சர்வோத்கர்ஷமாய் பிரகாசிக்கின்றார். (58)

मस्ते दिव्यधुनीं च शीतकिरणं भास्वज्जटामण्डलं
बिभ्राणं गरलं गळे डमरुकं वह्निं च हस्तद्वये ।
ध्येयं कुञ्चितवामपादकमलं सन्दर्शयन्तं करात्
भक्तानामभयप्रदान निरतं वन्दे सभेशं मुहुः ॥५९॥

சிரஸ்ஸில் கங்கையையும், சந்திரனையும், ஜடாசமூகத்தையும், கண்டத்தில் காளகூடவிஷத்தையும், வலதுகரத்தில் டமருகத்தையும், இடது கரத்தில் அக்நியையும் தரித்திருக்கின்றவரும், தேவமுனி யோகீந்திரர்களால் தியானம் செய்யத்தகுந்த கொஞ்சம் வணங்கின வாமசரணாரவிந்தத்தை ஒரு இடது கரத்தால் காண்பிக்கின்றவரும், மற்றொரு வலதுகரத்தால் பக்தர்களுக்கு அபயத்தைத்தருகின்றவருமான சித்ஸபா நாயகரை அடிக்கடி நமஸ்கரிக்கின்றேன். 'டமருகமென்பது வியாகரணாதி மகா சாஸ்திரங்களை பிரகாசிக்கச்செய்ததும் தன்மூலமாக சம்சார சமுத்திரத்தில் மூழ்கின பிராணிகளை எழுப்புகின்றதுமான பெரியத்வனியுள்ள சிறிய உருவமுடைய ஒரு வாத்யவிசேஷம்,

स्फुरड्डमरुनिध्वानानिर्जितांभोधिनिस्वनः ।

பிரகாசிக்கின்ற டமருகத்தின் பெரியசப்தத்தால் ஜயிக்கப்பட்ட சமுத்ரசப்தத்தை உடையவர் என்று நடேசஸஹஸ்ரநாம வசனம். இவ்வாறே ஒரு புராதன பக்தசிகாமணியும் ஸ்துதிக்கின்றார்.

लोकानाहूय सर्वान् डमरुकनिनदैः घोरसंसारमग्नान्
दत्वाऽभीतिं दयालुः प्रणतभयहरं कुञ्चितं वामपादम्।
उध्धृत्येदं विमुक्तेरयनमिति कराद्दर्शयन्प्रत्ययार्थं
बिभ्रद्वह्निं सभायां कलयति नटनं यश्शिवो नस्स पायात् ॥

இது ஸ்ரீ திவ்ய நடேசமூர்த்தியின் அத்யுத்தமஸார த்தியானஸ்துதியாகும். இதன் விரிவுரையை பின் ஒருஸமயம்எழுதுவோம்.(59)

गौरीवक्त्रसरोरुहेक्षणरतं कारुण्यसिंधुं विभुं
श्रीमद्व्योमसभान्तरे च नटनं कुर्वन्तमानन्दतः ।

आनन्दावहदिव्यरूपममलं नित्येष्टसन्दायकं
सद्रत्नाभरणोज्वलं नटपतिं वन्दे सभेशं सदा ॥

ஸ்ரீபார்வதீதேவியின் முககமல தர்சனத்தில் ஆசையுள்ளவரும் கருணைக்கடலும் வியாபகரும் ஸ்ரீமஹாகாச ஸபையின் நடுவில் ஆனந்தத்தால் நடனஞ்செய்கிறவரும் ஆனந்தத்தைத்தருகின்ற திவ்யமங்கள மூர்த்தியை உடையவரும், நிர்மலரும், பக்தர்களுடைய இஷ்டங்களை அளிக்கின்றவரும், உயர்ந்த ரத்நபூஷணங்களால் பிரகாசித்திருக்கின்றவரும், சபாபதியுமான நடநாயகரை எப்பொழுதும் நமஸ்கரிக்கின்றேன். (60)

தொடரும்

சிதம்பரம் ராஜா சோமசேகர தீக்ஷிதர்.

ஆர்யச்சிறுவர்களின் சம்பாஷணை.

சித்ஸபேசன், வாஞ்சேசன் என்ற ஆர்யச்சிறுவர்கள் ஸாயங்காலத்தில் ஸந்தியாவந்தனம் செய்ய நதிக்கு வந்தார்கள். அதற்காக அங்கு பெரியோரும், சிறியோரும் பலர்வந்து கூடினார்கள். சித்ஸபேசனும், வாஞ்சேசனும் முழங்கால்வரை கால்களை அலம்பிக்கொண்டு கரையில் குந்திட்டு உட்கார்ந்து, சிகையைககட்டிக் கொண்டு இரண்டு கைகளும் இரண்டு முழங்காலுக்குள்ளிருக்கும்படியும் அதில் இடதுகைஜலத்தில் படும்படியும் வைத்துககொண்டு விதிப்படி ஆசமனம் செய்து, புண்ட்ரம் தரித்து ஸந்தியாகாலத்திற்குச்சிறிது காலமிருந்தபடியால் கரையில் உட்கார்ந்து இனியதோர் சம்பாஷணைசெய்யத்தொடங்கினார்கள்.

சித்ஸபேசன்—பிரிய மித்திர! பரமேசுவரன் பிராணிகள் கடைத்தேறவேண்டி பரமகருணையுடன் கற்பித்தபரமோபகாரமான பதார்த்த ஸிருஷ்டியாதிகளின் தத்துவத்தைக் கண்டறிந்தவர்கள் நம்முடைய பெரியோர்களல்லவா? அவர்களுடைய ஸூக்ஷ்ம புத்தியை என்னவென்று சொல்வது ஆச்சர்யம்.

வாஞ்சேசன்—மித்திரனே! மெய்தான் நீ சொல்வது. ஆனால் தற்காலத்தில் சிலர் அப்படி நினைப்பதில்லை. ஈசுவராக்ஞாப்

பிரகாரமாக அவர்கள் செய்திருப்பது முழுவதையும் மிகக் கேவலமாக நினைக்கிறார்கள். சுயநலத்தைப்பாராட்டி பிரபஞ்சத்தையே பாழாக்கிவிட்டதாக பஹிரங்கமாய் பேசுகிறார்கள். (இதைக்கேட்டு ஒரு கிழவர் கிட்டவந்தார்.)

கிழவர்—வாஸ்தவம்தான் அது. பெரியாரெனப் பெயர்வைத்துக் கொண்டு ஜகத்தை அன்னியாயமாய்க் கெடுத்துவிட்டார்கள். மூடநம்பிக்கையை உண்டுபண்ணி மூடஜனங்களை மோசம் செய்துவிட்டார்கள். பழையவழக்கம்—பிராசீன சம்பிரதாயம் என்று சொல்லிக்கொண்டு என்னென்ன புரளி பண்ணிவிட்டார்கள் தெரியுமா? புதுநாகரீகம் பெருகிவரும் இந்நாளில் இவர்களது பாச்சாபலிக்காது எல்லோருமிவர்கள் மோசடியைத் தெரிந்துகொண்டுவிட்டார்கள். பால்யம் முதற்கொண்டே சில பசங்களைப் பழக்கிவைக்கிறார்கள்? என்ன வஞ்சனை இதுவாபுத்திசாலித்தனம்?

சித்ஸபேசன்—பெரியவரே! தங்கள் வார்த்தையிலிருந்து தாங்கள் புது நாகரீகத்தில் தேர்ச்சியடைந்தவரெனத்தெரிகிறது அதில் தங்கள் கோஷ்டியார் நாட்டுக்குச்செய்த நன்மையெதுவோ? பெரியோரைப் பழித்ததைவிட பெரியகார்யம் என்னசெய்துவிட்டீர்கள். விரலை மடக்கும். அதிருக்கட்டும். பட்டணவாஸமானதால் தங்களை நாங்கள் நன்றாய்த் தெரிந்துகொள்ளவில்லை. தங்களுக்கு எந்த ஊர்?

கிழவர்—இதற்குமேற்கே 4-மைல் தூரத்திலுள்ள ஓர் குக்கிராமம்.

சித்ஸபேசன்—ராஜபாஷைப்படித்து ராஜாங்கத்தில் உத்தியோகமுண்டோ?

கிழவர்—ராஜபாஷை படித்தேன். உத்யோகம் கிடைக்கவில்லை.

சித்ஸபேசன்—ஓஹோ தங்கள் பால்யத்திலேயே பிரமத்துவேஷமாரம்பமாய்விட்டதோ?

கிழவர்—பிரம்மத்துவேஷமவ்வளவாகயில்லை. ஆனால் கொச்சின் பேபரைக் களவுசெய்தேன். அதைக்கண்டுபிடித்து தண்டித்து கெவர்மெண்டு உள்ளவரை படிக்கவும்கூடாது. உத்யோகத்திற்கும் லாயக்கில்லையென்று தள்ளிவிட்டார்கள். அதனால் உத்யோகமில்லை.

சித்ஸபேசன்—இதோர் புது நாகரீகமோ? இருக்கட்டும்? பிறகு காலக்ஷேபம் எப்படி? பூர்வீகஸொத்து உண்டோ?

கிழவர்—என்னடா பயலே பரிஹாஸம் செய்கிறாய் பெரியார் என்ற மரியாதை இல்லையா?

சித்ஸபேசன்—பெரியவரே! கோபங்கொள்ளலாகாது. தங்களுக்கு பெரியோரிடம் மரியாதை ஜாஸ்திபோலிருக்கு. சற்று முந்தித்தாங்கள் சொன்னதென்னவோ? புது நாகரீகத்தில் பட்டாபிஷேகம் பெற்றவராச்சுதே என்று கேட்டேன். பழயவழக்கத்தில் இப்படியெல்லாமில்லை. மேல்சொல்லுங்கள்.

கிழவர்—பூர்வீகசொத்து கொஞ்சமிருந்தது, அது நம்முடைய படிப்பில் தொலைந்துவிட்டது. வீடுவாசலெல்லாம் விற்றாய் விட்டது. காலக்ஷேபத்திற்கு வழியொன்றுமில்லை. பிள்ளை பேரன் ஸம்ஸாரமோ பலம். வீட்டுத்தொந்திரவு ஜாஸ்தி. அதற்காகப் பணந்தேடாமல் முடியவில்லை. பெஸண்டு கக்ஷியில் சேர்ந்தேன். பலபேர்களை ஏமாற்றி அந்த கக்ஷிக்கு ஆள் சேர்த்தேன். அதில் கொஞ்சம் காசு கிடைத்தது. காலக்ஷேபத்திற்கு போதவில்லை. அந்தக்கக்ஷியும் மெலிவடைந்தது.

சித்ஸபேசன்—இது பெரிய நாகரீகந்தான். மேலேசொல்லுங்கள்.

கிழவர்—பிறகு அநேக ஸமாஜங்கள் தோன்றின. அவைகளில் கிங்காணாய்ப்புகுந்தேன். 'பட்டியென்று பெயர்பட்டும்பட்ட கடன் அடையவில்லை' என்றகதையை அனுஸரித்து நம்மை விட்டு தாரித்திரியம் விலகவில்லை. காங்கிரஸில் சேர்ந்தேன், கஷ்டம் நீங்கவில்லை.

சித்ஸபேசன்—அந்தோ கஷ்டம்! கிழவயதில் கஷ்டப்படுகிறாரே பிராமணன். என்னசெய்வார் பாவம். பெரியவரே. பிள்ளை பேரன் அதிகமென்றீரே! அவர்கள் ஸம்பாதிக்கவில்லையா? சுகமாயிருக்கலாகாதா?

கிழவன்—அவர்கள் ஒழுங்காயில்லை. தனித்தனியாகப் பிரித்து விட்டுப்போட்டேன். அவர்களெல்லாம் தனித் தனியே போய்விட்டார்கள். சுகமாகயிருக்கிறார்கள். கிழவியும் கிழவனுமாகக் கஷ்டப்படுகிறோம். காலம் கழிக்க வழிதெரியவில்லை. என்னசெய்வேன். கடைசியாகப் பழயவழியே பெரியவழியென்று வைதிகத்தில் சேர்ந்து தெவசம் திங்கள்

நடக்கிறவிடத்திற்கெல்லாம் போகத்தலைப்பட்டேன். வாத்தியார்கள் படுத்துகிறபாடு கணக்குவழக்கில்லை. பூரிக்காசுகூடக் கிடைப்பது அரிதாய்விட்டது. அதனால் நவீனமாய் ஒரு புதுச் சங்கம் கிளம்பியிருக்கிறதாம். அதில் வேறே எவ்விதப்படிப்பும் வேண்டாமாம். வைதிகரை நன்றாய் வையத்தெரியவேணுமாம். அந்தக் கக்ஷிக்குப்போனேன். வையச்சொன்னார்கள். தெரிந்தவரை வைதேன். போராது இன்னும் தேர்ச்சிபெற்று வாவேணுமென்று விரட்டிவிட்டார்கள். வைதிகர் கூடினகூட்டத்தில் வைது பழகிக்கொள்ளுகிறேன். நீங்கள் வயத்தெரிச்சலை கிளப்புகிறீர்களே அப்பா?

சித்ஸபேசன்—பேஷ்! பேஷ்!! புது நாகரீகம் நன்றாய்ப் பெருகி வருகிறது. பிள்ளைக்குத் தகப்பனில்லை. தகப்பனுக்குப் பிள்ளையில்லை. இவர்களெல்லாந்தான் பொது நலத்திற்கு உழைப்பவர்களாம். பெரியோர்களெல்லாம் பாழடித்தவர்களாம். என்ன காலவித்தியாஸம்! என்ன புது நாகரீகம்! கிழவரே ஏன் வீணாய்கெட்டு கலங்குகிறீர். பால்யத்திலேயே போனவழி கோணல். கோணப் படிப்பு. கோணல்புத்தி எல்லாங் கோணலாயிருப்பதோடு முதுகும் கோணிக் கூனல் ஆய்விட்டதே. வயதுகாலத்தில் ஏன் இந்தப் பாபம் செய்கிறீர். முன் ஜன்மாந்தரத்தில் என்ன பாபம்செய்தோ பிள்ளை போன்களைப் படைத்தும் பிரயோஜனப்படவில்லை. அடுத்த பிறவியில் இந்த மானிடப்பிறவிகூட கிடைக்காமல் புல்லு பூண்டாய்ப் பிறக்க ஏன் பாடுபடுகிறீர். சொன்னதைக் கேளும். கோபப்படாமலிரும். பெரியோரிடம் பழிகூறாமலிரும். ஸந்தி மந்திரமாவது தெரியுமல்லவா? அதையாவது ஒழுங்காகச்செய்து பரமனைப் பஜியும். நல்லவழிகாட்டுவார்.

கிழவர்—இந்த அமளியால் ஸந்தி மந்திரங்கூட மறந்துபோய் விட்டது. என்னசெய்வேன்!

சித்ஸபேசன்—கிழவரே கவலைப்படாதேயும். எங்கள் பெரியவர் இலவசமாகச் சொல்லிக்கொடுக்கிறார் வந்து கற்றுக் கொள்ளும்.

கிழவர்—அப்படியேயாகட்டுமென்று கிளம்பினார்கள். எல்லோரும் இந்த சிறுவர் சம்பாஷணையில் சிரத்தைகொண்டார்கள். ஸந்தியாவந்தனம்செய்துவாஸஸ்தலம்சென்றார்கள். சிறுவன்;

உபதேச ஸாரம்.

ஆத்துமஸ்வரூப விசேஷத்தில் விப்ரதிபத்தி.

ஸாமான்யமாய் 'நான்' என்று ஆத்துமஸ்வரூபம் ஸம்சயப் படத்தகாவண்ணம் எல்லோருக்கும் தோன்றிக்கொண்டே இருக்கிறது. அதனால் அதில் ஒருவனும் நானா-இல்லையா என்று ஸம்சயப்படுவதில்லை. நானில்லையென்று விபரீத உணர்ச்சியை யுமடைவதில்லை. ஆயினும் அந்த ஆத்துமாவின் ஸ்வரூப விசே ஷத்தில் பாமரர்முதல் பண்டிதர்வரை ஸம்சயப்படுகிறார்கள். சிலர் விபரீத ப்ரமத்தையும் அடைகிறார்கள். அதனாற்றான் அந்த விஷயத்தில் மதபேதங்கள் ஏற்பட்டன. அதன் வரலாறு பின் வருமாறு காண்க. சித் (சேதனன்) அசித் (அசேதனன்) என்று வஸ்து இருவகையாயிருக்கின்றது. அவற்றுள் அசேதனவஸ்துத் தானுள்ளது சேதனனென்று இதைவிட வேறாய் ஒன்றில்லை. அசேதனங்களான ஆகாசாதிபூதவஸ்துக்கள் சரீரவடிவமாகச் சேரும்பொழுது, வெற்றிலை-பாக்கு- சுண்ணாம்பு இந்த மூன்றும் ஒருவிதமாகச்சேரும்போது தனித்தனியே அவைகளில் காணப் படாவிடினும் சிகப்புநிறம் உண்டாவதுபோல் அறிவென்னும் குணமுண்டாகின்றது. தனித்தனியே பூதங்களில் அறிவு காணப்படாவிட்டாலும் சேரும்போது உண்டாகும். நான் என்று தோன்றும் அந்த அறிவுதான் ஆத்துமாவென்று சொல்லப்படு கிறது. இது நாஸ்திகக்கொள்கையாகும், இதில் உட்பிரிவுகள் பல வுண்டு. அவைகள் நாஸ்திகமதங்கள். இதைக் கண்டித்து ஆஸ்திகமதம் எழும்புகிறது. அதிலும் அனேகம் பிரிவுகளுண்டு. அவற்றுள் சேதனம்—அசேதனம் இரண்டும் ஸத்தியம். இவை களில் அனேகபேதங்களுண்டு. எல்லாம் ஸத்தியங்களே என்று சில ஆஸ்திகர்களது கொள்கை. கடைசியாக சித்தாந்தத்தில் "சேதனம் ஒன்றுதான் ஸத்தியம். மற்றவை கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளிபோல் மித்யை, அவை அக்ஞானவசத்தாற் றோன்றுகின்றன, ஞானத்தால் அக்ஞானம் பாதிக்கப்படவே சேநமொன்றுதான் மிஞ்சும். அதுதான் கைவல்யம். மோக்ஷ நிலை" என்று ஸித்திக்கின்றது. இந்த உண்மை விசாரித்தாற்றான் புலப்படும். அதற்காக ஆத்துமஸ்வரூப விசேஷத்தில் வாதிகளால்

வர்ணிக்கப்படும் விப்ரதிபத்தியைக்காட்டி, பாமரர்கொள்கையிலி ருந்துவிசாரணைசெய்து ஸித்தாந்தத்தில்முடிவுசெய்வோம். ஆத்தும வஸ்துத்தான் அதிப்பிரியமாயுள்ளது என்று பெரும்பாலும் எல்லோருக்கும் தோன்றுவதானாலும் அதிபாமரர் அப்படி நினைப்பதில்லை. அவர்கள் நினைத்திருப்பதை பஞ்சதசப்பிரகா ணத்தில் விவரித்திருக்கிறார்கள். அதெப்படியெனில்—

इत्यादिभि स्त्रिभिः प्रीतौ सिद्धायामेवमात्मनि ।
पुत्रभार्यादिशेषत्वमात्मनः कैश्चिदीरितम् ॥

"இவ்விதமாக சுருதி-யுக்தி-அனுபவம், ஆகிய மூன்று பிரமாணங் களாலும் ஆத்துமாவிடத்தில் பரம ப்ரீதியானது ஸித்தமாயிருப் பினும், சிலர் இதை நம்பாமல் ஆத்துமாவைவிட புத்திர, களத் திராதிகளே அதிப்பிரியர்களாவார்கள். அதனால் புத்திராதிகளுக்கு ஆத்துமா உபஸர்ஜன (சேஷ) மாகிறது எனக் கூறுவார்கள்,,

एतद्विवक्षया पुत्रे मुख्यात्मत्वं श्रुतीरितम् ।
आत्मा वै पुत्रनामेति तच्चोपनिषदि स्फुटम् ॥

இப்படி சிலருக்குத்தோன்றுமென்பதை கர்மகாண்ட சுருதியும் அனுவாதம்பண்ணி "முக்கியாத்துமாவென்பது புத்திரனே,, என்று விளக்கிக்காட்டுகின்றது. இது ஐதரேயம் முதலிய உப நிடதங்களிலும் ஸ்புடமாயுள்ளது.

सोऽस्यायमात्मा पुण्येभ्यः कर्मभ्यः प्रतिधीयते ।
अथास्येतरआत्मायं कृतकृतः प्रमीयते ॥

புருஷனுடைய சரீரத்தில் முதலில் கர்ப்பமாயிருந்து, பிறகு ருது காலத்தில் ஸ்திரீயின் கர்ப்பாசயத்தில் ரேதஸ்ஸோடு பிரவேசிக் கும்படி செய்யப்பட்டு, மிகவும் அருமையாகக் காப்பாற்றிவந்து பெரும்பாலும் பத்தாவதுமாஸத்தில் ஜனனமானபுத்திரனென்றும் ஆத்துமா புண்ணிய கர்மானுஷ்டானத்திற்காகப் பிரதிநிதியாகச் செய்யப்படுகிறான். பிரத்தியக்ஷமாகக்காணப்படும் பிதாஎன்னும் ஆத்துமாதன் வேலையைமுடித்துவிட்டபடியால் மரித்துவிடுகிறது. ஆகவே புத்திரனே பிரதான ஆத்மா.

सत्यप्यात्मनि लोकोस्ति नापुत्रस्यातएवहि ।
अनुशिष्टं पुत्रमेव लोक्यमाहुर्मनीषिणः ॥

அன்றியும் இந்தக்கருத்தை மற்றோர்சுருதியும் திடப்படுத்துகிறது. புத்திராதிகளைவிட ஆத்துமா பிரதானனாயிருந்தால் அவன் ஸ்வதந்திரமாகவே புத்திராதிகளை எதிர்பாராமல் லோகாந்தரத்தை அடைந்துவிடலாம். அப்படி அடைந்துவிட முடிகிறதில்லை. ஆத்துமாயிருக்கும்பொழுதும் புத்திரனில்லாவிட்டால் பரலோகம் கிடைக்காதாம். இது புராணங்களில் பல இதிஹாஸங்களால் வர்ணிக்கப்படுகின்றது. அன்றியும் சாஸ்த்ர உண்மையை அறிந்தவர்களும் நல்லவழியில் அனுசாஸனம் செய்யப்பட்டு திருத்தப்பட்ட புத்திரன்தான் பரலோக ஸாதகமாவான், என்று கூறுகின்றார்கள்.

मनुष्यलोको जय्यः स्यात् पुत्रेणैवेतरेण नो ।
मुमूर्षुर्मन्त्रयेत्पुत्रं त्वं ब्रह्मेत्यादि मन्त्रकैः ॥

பரலோக ஸுகம்மாத்திரம் புத்திராதீனமாகக் கிடைக்கிறதென்பதில்லை. மனுஷ்ய லோக சுகமும் புஷ்கலமாகவேண்டுமானால் புத்திரனால்தான் பெறவேண்டும். புத்திரனில்லாதவனுக்கு சுக ஸாதனமான தனதான்னியாதிகள் எவ்வளவிருந்தும் வெறுப்பையுண்டுபண்ணுகின்றனவேயன்றி சுகத்தையுண்டுபண்ணுவதில்லை. மரணத்தையடையுந் தருவாயுள்ளவன் புத்திரனையழைத்து சாஸ்திரத்தில் கூறியவாறு அனுசாஸனம் செய்யவேண்டும்.

इत्यादिश्रुतयः प्राहुः पुत्रभार्यादि शेषताम् ।
लौकिका अपि पुत्रस्य प्राधान्यमनुमन्वते ॥

என்பதாதி சுருதிவாக்கியங்கள் ஆத்துமா புத்திராதிகளுக்கு சேஷனேயொழிய பிரதானனல்ல. என்று கூறுகின்றன. லௌகிகர்களும் புத்திரனுக்கும் பிராதான்யத்தைச் சம்மதிக்கிறார்கள். எப்படியெனில்—

स्वस्मिन् मृतेऽपि पुत्रादिर्जीवेद्वित्तादिना यथा ।
तथैव यत्नं कुरुते मुख्याः पुत्रादयस्ततः ॥

தான் செத்தாலும் இந்த தனதான்யாதிகளை வைத்துக்கொண்டு புத்திராதிகள் சுகமாக ஜீவிக்கட்டும் என்று உலகத்தார் முயல்கிறார்கள். தனக்காக ஒருகாசுகூட செலவிடாமல் பிள்ளைக்கென்று சேர்த்துவைக்கிறார்களல்லவா? இத்தியாதி காரணங்களால் புத்திராதிகள் பிரதானமானவர்கள். ஆத்துமா அவர்களுக்கு உபஸர்ஜனமானவன்-என்று பிராகிருத ஜனங்கள் அபிப்பிராயப்படுவதை

விவரித்திருக்கிறார்கள். இங்கு பாமரஜனங்கள் சுருதியை எடுத்துக்காட்டியது அதைப் பிரமாணமாக நம்பியல்ல. வைதிகர்களிடம் தன் கக்ஷியை ஸாதிக்க அவர்கள் ஒப்புக்கொண்ட பிரமாணத்திலும் தங்கள் கக்ஷி கூறப்படுகின்றது என்று சொல்லுவதற்காகமாத்திரமேயாம் அவர்கள் சுருதியைப் பிரமாணமாக நம்பினவர்களானால் அதற்கு எப்படி அர்த்தம் சொல்லவேண்டுமோ அப்படியன்றோ நியாயப்படி முன்னும் பின்னும் பார்த்துச் சொல்லுவார்கள். இப்படி மிகவும் பாமரனாயிருப்பவனுக்கும் ஆபாஸமான சிலசுருதி யுக்தி அனுபவங்கள் தோன்றிவிடுகின்றன. அவைகளைக்கொண்டு அவன் பிடித்தகக்ஷியையே பலப்படுத்த ஆள் சேர்த்துவிடுகிறான். இவன் வார்த்தையையும் நம்பி பலர் அந்தக்கக்ஷியில் சேர்ந்துவிடுகிறார்கள். அந்த ஆச்சரியத்தை தற்காலத்தில் நன்றாகக் காணலாம். பிள்ளையாண்டான் பெருத்த உத்தியோகத்திற்குவந்துவிடவேணுமென்ற பேராசையால் பலர் பிராசீன சொத்துக்களையும் வித்தடிச்சுப் பட்டணம்வந்து பிள்ளைகளைப் படிக்கவைத்துப் பூர்வீக ஸொத்துப் போகாவிட்டால் பிணம்தூக்கிச்சவுண்டி சாப்பிட்டு செய்யத்தகாத கார்யங்களைச் செய்து பாபத்தைப் பெருமூட்டையாகக் கட்டிவிடுகிறார்கள் படித்துப் பாஸாவதற்குள் மற்றது எப்படிப்போனாலும் தலைகிருப்பு-முககூஷவரம்-தானாக க்ஷவரம்-கோணமகுடு இவைகளில் நன்றாய் தேரிவிடுகிறான். படிப்பிலும் தேரிவிட்டால் ஒருவேலைக்கும் லாயக்கில்லாமல் டொப்பியைவைத்து டவுன் டவுனாய் அலைகிற இந்த அழகைப்பார்த்துப் பெற்றோர் பேச வழியில்லாமல் விழிக்கிறார்கள். இப்படி பிள்ளைகளை விடாமல் நல்லவழியிலாவது அநுசாஸனம் செய்யவேண்டுமென்று கருதி நல்லவழி நாடுவார்களாக.

ஸ்ரீ குமாரபூஜை

ஸ்ரீ திருவானைக்காவல் ஸ்ரீ ஜகத்குரு வித்யாஸ்தானத்தில் இருக்கும் 14-வயதிற்கு மேல்படாத வேதம் காவ்யம் இவைகளை ஓதும் வித்யார்த்திகள் நாளது தை-மீ சென்ற 10உ சனிக்கிழமை புஷ்யநக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் ஸ்ரீ ஷண்முகதேவ தேவரைப் பூஜிக்கவேண்டுமென்கிற அவாவின் மேலீட்டால்

அதற்குவேண்டிய வில்வம், துளஸி, புஷ்பம் முதலான பூஜாதிரவி யங்களைத் தாங்களேபோய் ஸம்பாதனம்செய்து மாலை 6-மணிக்கு ஒரு பையன் ஸ்நாநம்செய்து மடியுடையுடுத்தி, மாலைக்கடனையும் விதிவழுவாது முடித்துப்பிறகு 7-மணி சுமாருக்கு பிம்பரூபமாய் பிரகாசிக்கும் கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதீமஹாஸ்வாமிகளவர்களுடைய திவ்ய ஸந்நிதியில் தர்சிப் பவர்களுடைய மனதைக் கவரும்படியாகச் சிறப்பாய் அலங்கரித் துச் சிறந்தபீடத்தில் உத்தமமான ஆஸநத்தில் அமர்த்தப்பட்ட ஸ்ரீபாலஸுப்பிரமணிய பிம்பத்திற்குப் பூஜைசெய்ய ஆரம்பித் தான். அந்தப் பையன்களுக்குள் பூஜாவிதியை நன்கறிந்த ஒரு வன் ஆசார்யனாகவிருந்து விதிப்படி ஆராதிக்கு முறைகளை முறையே அறிவித்தான். அதன்பிரகாரம் பூர்வாங்கமான ஆரா தனங்களைச் செவ்வன நடாத்திய பிறகு அர்ச்சனங்களை விசேஷ மாகச் செய்யவேண்டுமெனக்கருதி முந்தியே சேகரம்பண்ணி வைத்திருந்த பில்வம், துளஸி முதலான உத்தமமான பத்திரங்களைக்கொண்டு அஷ்டோத்திர ஸஹஸ்ர (1008) நாமார்ச் சனத்தைச் செய்யத்துவக்கி ஒருநாமாவையாவது விடாமல் எழுத்துப்பிழையின்றி ஸ்பஷ்டமாய் அவஸரப்படாமல் 1008 அர்ச்சனையையும் நன்றாய்ச் செய்தான். அந்த ஸமயத்தில் அங்கு வந்து தர்சிக்கும் ஜனங்களும் ஸ்கந்தமூர்த்தியைப்பார்த்து மெய் மறந்து பரவசர்களாய்க்கொண்டு தாங்கள் மனமென்கிற மலரை யும் ஸ்ரீ வேலாயுதக்கடவுளுடைய சரணங்களில் ஸமர்ப்பணம் செய்து களித்தார்கள். இவ்விதம் லௌகிகமான ஆடம்பரமின்றி ஸாத்விக முறையில் விதிப்படி ஆராதனத்தைப் பூர்த்தி செய்தார் கள். உடனே அங்குவந்திருந்த வேதத்தில் விசேஷமானபயிற்சி பெற்ற ஒரு பெரியார்—அந்த ஸந்நிதியையும் பையன்களுடைய பக்திசிரத்தையையும் பார்த்து மனம்மகிழ்ந்து தமதருகிலிருந்த ஸ்ரீமடம் வித்வான் ப. பஞ்சாபகேசசாஸ்திரியவர்களிடம் இந்தப் பையன்களுக்கு சிரேயோபிவிருத்தி உண்டாகும்படி உபன்யாஸ ரூபமாய் அற்பம் உபதேசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண் டார். சாஸ்திரியவர்களும் அப்பெரியாரின் கருத்திற்கிணங்கி எளிய தமிழ் நடையில் பாலர்களும் சுலபமாய் அறிந்துகொள் ளும்படி ஸ்ரீ பகவானுடைய ஆராதனம் ஸகல ஜனங்களுக்கும் முக்கியமென்றும் இந்த உத்தமமான காரியத்தைச்சிறு வயதி

லிருக்கும் இவர்கள் நடத்தியது எவர்களுக்கும் ஸந்தோஷத்தை யுண்டுபண்ணுமலிராது என்றும் பகவதாராதனமென்கிற கர்மாவின் பெருமையைப்பற்றியும் விரிவாக எடுத்துக்கூறி முடிவுவரையில் இங்கு விளங்கும் ஸ்ரீ ஜகத்குரு பரமாசார்யாளும் ஸ்ரீ ஷண்முகரும் இந்த வித்யார்த்திகளுக்கு மெம்மேலும்வித்யாபிவிருத்தியையும் உத்தரோத்தரம் சிரேயஸ்ஸையும் அளிக்கவேண்டுமென்று தாம் பிரார்த்தித்துக்கேட்டுக்கொள்வதுடன் இச்சபையில் விளங்கும் மற்றுமுள்ள பெரியார்களும் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று பிரார்த்தித்து உபன்யாஸத்தை முடித்துக்கொண்டார்கள். பிறகு சந்தனம், பலம், பஞ்சாமிர்தம், புஷ்பம், தாம்பூலம் முதலான பிரஸாதங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

இவ்விதம் விமர்ஸையாய் முடிவடைந்த 10-நிமிஷத்திற்கெல்லாம் சுத்தனுபிருந்து ஸ்ரீஸுப்பிரமண்யஸ்வாமியைப் பூஜை செய்த சுமார் 13. வயதுள்ள பரமேசுவரன் என்கிற பையன் பேரில் ஸ்ரீஷண்முகர் ஆவேசம் ஏற்பட்டு. உள்ளிருந்து பகவத் ஸந்நிதிக்கு ஒடிவந்து பலவான்களான இரண்டு பெரியவர்கள் கட்டிப்பிடித்தும் அடங்காமல் நர்த்தனஞ்செய்துகொண்டு தம் ஸமீபத்தில் ஏன் தண்டம் வைக்கவில்லை என்று கேட்டவுடன் அங்கிருந்தவர்கள் மறதியினுல் வைக்கத் தவறிவிட்டதென்று அறிவித்து உடனே ஒரு தண்டத்தை பகவானுக்குப் பக்கத்தில் வைத்தார்கள். அப்பால் உங்களுக்கு வேண்டியதென்ன என்று அந்த மருள்வந்த பையன் வினவும்பொழுது வித்தியாபிவிருத்தியும் ஸகல ஜனங்களுக்கும் க்ஷேமமும் வேண்டுமென்றும் அறிவித்தார்கள். அவனும் அதை சரியென்று அங்கீகரித்து உடனே வந்தனம் செய்யும் பாவனையாக பகவான் ஸந்நிதியில் விழுந்து கால்மணிவரையில் அசையாமல் படுத்திருந்து பிறகு நித்திரையிலிருந்து எழுந்திருப்பவன்போல் எழுந்திருந்து ஸ்வபாவமான நிலைமையில் பேசிக்கொண்டிருந்தான். அவனைக் கேட்டால் தனக்கொன்றும் தெரியாதென்கிறுன்.

தற்காலம் கலியின் கொடுமை எவ்வளவு அதிகமாயிருப்பினும் பக்தியாலோ அல்லது விளையாட்டாகவோ பகவன் மூர்த்திகளை உபாஸித்தால் அதினுலவர்கள் திருப்தியடைந்து அனுக்ரஹம்செய்ய சித்தமாயிருக்கிறுர்கள்என்பதையும் பிரத்யக்ஷமாய் காண்பிக்கிறபடியால் அவாவர்களும் தங்களுக்கிஷ்டமான எதாகிலும் ஒரு தேவதாமூர்த்தியையுபாஸித்துப் பிறவிப்பயனையும் இஷ்டஸித்தியையும் பெற்று ஸுகித்திருப்பார்களாக.

வைதிகதர்மாபிமானி.

ஸ்ரீ முகபடநோத்ஸவம்.

சென்ற ஸ்ரீசங்கரஜயந்திமுதல் ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகள் லோகாநுக்ரஹத்திற்காக ஸம்ஸ்கிருதத்தில் எழுதிய ஸ்தோத்ரம் முதல் ஸூத்ரபாஷ்யம்வரையிலுள்ள வேதாந்த நூற்களின் ஸாரமான உபதேசத்தைத்திரட்டி ஓர் தமிழ்மாத ஸஞ்சிகையாக ஸ்ரீமான் ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் வெளியிட்டு வருகிறார். இந்த ஸஞ்சிகைகள் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளாய் ஆதிசங்கரர் அபராவதாரமாய் தற்கால பீடத்தை அலங்கரிக்கும் ஸ்ரீஸ்வாமிகளவாள் ஸ்ரீ பாதாரவிந்தங்களில் பக்தி ச்ரத்தையுடன் ஸமர்ப்பிக்கப்பட்டன. அதை அன்புடன் கடாக்ஷித்து ஸ்ரீமஹா ஸன்னிதானத்தில் ஓர் ஸ்ரீமுகம் அனுப்பப் பட்டது.

அதைக்கண்டு பரமானந்தமடைந்த ஸ்ரீசங்கரோபதேச ரத்நமெனும் ஷ்மாத சஞ்சிகையின் சந்தாதாரர்கள் சென்ற திங்களன்று ஸ்ரீ சங்கரமடத்திலும் செவ்வாயன்று மாம்பலத்திலும் ஸபைகூட்டி மிக்கபக்தியுடனும் உத்ஸாகத்துடனும் ஸ்ரீமுகத்தை வரவேற்று அதை பன்முறை படித்துப்பொருள் கூறும்படி ஸ்ரீசர்மாவைவேண்ட அதன்கருத்தையும் ஸ்ரீமதாசார்யாள் உலகக்ஷேமத்தில் வைத்துள்ள ச்ரத்தையையும் ஸ்ரீஸ்வாமிகளது அபூர்வமாயும் ஆச்சர்யமாயுமுள்ள குணகணங்களையும் விளக்கி உபன்யாஸம் செய்தார். ஸ்ரீசங்கரோபதேசரத்னம் ஆசிரியருக்கும் பிரசுரதாரான ஸ்ரீராமச்சந்த்ர சாஸ்திரி கங்காதரய்யரவர்களுக்கும் ஸபையோர் வந்தனங்கூற ஸபை முடிந்தது.

உண்மைவிளம்புவோன்.

மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்கள்

(8-வது பக்கத்தொடர்ச்சி)

துர்வாஸஸ், ததீசி, கௌதமர், கண்வர், பிருகு, உபமன்யு முதலிய மஹர்ஷி சிரேஷ்டர்கள், பிரும்மா முதலிய மஹாத்மாக்களுடைய சாபமானது அவந்தியம், அதாவது தவறாததாகவுள்ளது என்பதை மத்வாசார்யாள் தமது செய்கையினால் உலகத்

திற்குக் காட்டுகின்றூர்கள் என்பது ஆறுவது ரஹஸ்யம். அது வருமாறு:—பூர்வகாலத்தில் ஸ்ரீ தாருவனத்தில் வஸிக்கும் சில மஹர்ஷிகள் தபஸ் செய்துகொண்டிருக்கும்பொழுது அனுவிருஷ்டியால் துவாதசவருஷ துர்பிக்ஷம் ஏற்படப் பசியால் வருந்தி எல்லோருமாகக் கூடிப்பசியை நிவிருத்தித்துக்கொண்டு ஸுபிக்ஷமாகக் காலம் கழிப்பதற்காக மஹா தபஸ்வியான கௌதம மஹர்ஷியைச் சரணமாக அடைந்து அவரது அனுக்ரஹத்தால் அவரது ஆச்ரமத்திலேயே பசி தாஹமில்லாமல் ஸுபிக்ஷமாகக் காலம்கழித்து வந்தார்கள். பிறகு பன்னிரண்டு வர்ஷங்கள் சென்றதும் முன்போல் மஹத்தான விருஷ்டியால் எங்கும் ஸுபிக்ஷம் ஏற்பட்டது. பிறகுமஹர்ஷிகள்தம் தம் இருப்பிடம் போவதற்காக கௌதம மஹர்ஷியினிடம் உத்தரவு கேட்டார்கள். கௌதமர் கொஞ்சகாலம்கழித்துப் போகலாமென்று தடுத்து விட்டார். பிறகு மஹர்ஷிகள் வெகுகாலம் இவ்விடமிருந்தபடியால் எப்படியாவது இவ்விடத்தை விட்டுவிட்டு இப்பவே போய்விடவேண்டுமென்றுகருதி அதற்குளர் உபாயத்தை ஆலோசித்துமாயாமயமான ரொம்பவும் கிருசமாயுள்ளளர் கோவை உண்டுபண்ணி கௌதமருடைய ஸமீபம் போகும்படி செய்தார்கள். அதைக் கண்டதும் ரொம்பவும் தயவுடன் கௌதமர் அதை ஸம்ரக்ஷிக்கக்கருதி கோஷ்டத்தில் அதைக் கட்ட ஆரம்பித்தார். கௌதமர் தொட்டமாத்திரத்தில் அந்தப் பசுவானது மரித்து விட்டது. உடனே கௌதமர் ரொம்பவும் வருத்தப்பட்டுக் கொண்டு என்னசெய்கிறது என்று புரியாமல் ஆலோசித்துக் கொண்டிருக்கும்பொழுது மஹர்ஷிகள் இதுதான்நாம் ஊருக்குப் போவதற்குத் தகுந்தஸமயமென்று எண்ணி, ஹே கௌதம மஹர்ஷியே! நீர் கோஹத்திசெய்துவிட்டபடியால் பாபியாக ஆய்விட்டீர். இனி உம்முடைய அன்னம் புஜிக்கத்தக்கதல்ல. நாங்கள் ஊருக்குப்போகிறோம் என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள். உடனே கௌதமர் தனது தியானதிருஷ்டியினால் கோஹத்தி ஏற்படுவதற்குள்ள நிமித்தத்தை ஆலோசிக்கும் பொழுது இது மஹர்ஷிகளின் மாயை, வாஸ்தவமான கோவில்லை என்று தீர்மானித்து உடனே ரொம்பவும் கோபங்கொண்டு உபஜீவ்ய விரோதிகளாயுள்ள அந்த மஹர்ஷிகளைத் தனக்குப் பொய்யான அபவாதத்தை ஏற்படுத்தியதற்காக நீங்கள் வைதிகமான

பஸ்மருத்ராக்ஷ தாரணத்திலும் சிவாராதனத்திலும் வைதிகர்களி டத்திலும் துவேஷமுள்ளவர்களாய் வைதிகமான ஜ்ஞானமார்க் கத்திலிருந்துபிரஷ்டர்களாய்த் தாந்திரிகர்களாகப்போகக்கடவது என்று சபித்துவிட்டார். இந்த விஷயம் கௌர்மம் ஸூதஸம் ஹிதை முதலியதில் கூறப்பட்டிருக்கிறது.

இதுபோல் தக்ஷப்பிரஜாபதி செய்த யாகத்தில் தேவஸூா ஸார்வ பௌமனுகிய பிராம்மண தைவமான பரமேசுவரனுக்கு ஹவிர்பாகம் கொடுக்காமல் அவரை நிராகரித்து ஈசுவர துவேஷி களாய் தக்ஷருக்கு ஸஹாயார்த்தமாக வந்திருந்த சில மஹர்ஷிகளை நீங்கள் லோக வந்திதரான பரமேசுவரனை துவேஷித்தபடியால் நீங்கள் வைதிகமானசிரேயஸ்ஸிலிருந்தும் பிரஷ்டர்களாகவும் மஹா தேவவித்வேஷிகளாகவும் ஆகக்கடவது என்று ததீசிமஹர்ஷி சபித்ததாகவும் கூர்மத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதுபோல் பிருகுமுதலிய மஹர்ஷிகளுடையவும். பிரும்மாவினுடையவும், சாபங்கள் ஸ்காந்தம் பாரதம், வாஸிஷ்டம், லைங்கம், ஆதித்ய புராணம், பராசரபுராணம், முதலிய புராணேதிஹாஸாகமங் களிலும்; போதாயனுதி ஸ்மிருதிகளிலும், நன்கு நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. அந்த விஷயங்களை விஸ்தாரமாக அந்தக் கிரந்தங்களில் பார்த்துக்கொள்க. இவ்விதம் மஹர்ஷிகளுடைய சாபத்தினுல் கலியில் மஹாதேவ வித்வேஷிகளாயும் வைதிக வித் வேஷிகளாயும் அவதரித்தவர்களுள் ஒருவராகிய மத்வாசார் யாள் தமது பூர்வசாபத்திற்கு அவந்தியத்துவத்தை அதாவது மஹர்ஷிகளின் சாபம் வீண்போகாதது என்பதை உலகத்திற்கு விளக்கவேண்டுமென்று கருதியே தமது கிரந்தங்களில் ஏராள மாகச் சிவநிந்தை வைதிகநிந்தை இவைகளைச் செய்திருக் கின்றுர்கள். அதைக் கொஞ்சம் விசாரிப்பாம். மத்வர் பிரும்ம ஸூத்திரங்களுக்குத் தான் பாஷ்யம் செய்யும்பொழுது சாஸ்திர யோனித்துவாதிகரணம், ஸமன்வயாதிகரணம், முதலிய அதி காணங்களில் பிரும்மா சிவன் முதலியவர்கள் ஜகத்துக்குக் கார ணர்களன்று. நாராயணன் ஒருவரே ஜகத்துக்குக் காரணமாயுள் ளவர். பிரும்மா, சிவன், முதலியவர்கள் ஜீவர்கள். நாராயணன் ஒருவரே பரமாத்மா என்று கூறியிருக்கிறுர்.

தொடரும் போலகம் சு. ஸ்ரீராமசாஸ்திரிகள்

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

மஹாபிஷக்.

1. இக்ஷ்வாகு வம்சத்தில் மஹாபிஷக் என்று ஒரு அரசனிருந்தான். அவன் மிக தார்மிகன். ஆயிரம் அச்வமேதயாகம் செய்தான். நூறு ராஜஸூய யாகம்செய்தான். இந்த புண்யத்தால் ஸ்வர்க்கம் போனான். பிரும்மலோகம்போனான். அங்கே ஸகலதேவர்களும் வந்திருந்தனர். கங்காதேவியும் பெண்ணுருவத்துடன் வந்தாள்.

2. தற்செயலாக கங்கையின் மேல் துணி காற்றால் விலகினது. ரஹஸ்யமான பெண்கள் அவயவத்தைப் பார்க்கக்கூடாது. ஆகையால் தேவர்கள் எல்லோரும் கண்ணை மூடிக்கொண்டார்கள். மஹாபிஷக்மாத்ரம் ஆசையோடு அதைப்பார்த்தான். இது தப்பல்லவா? தப்புசெய்தால் யாருக்குத்தான் கோபம் வராது? பிரும்மாவுக்குக் கோபம்வந்தது.

3. ராஜனே! நீ இந்த ஆசை வைத்திருக்கமட்டும் இந்த லோகத்திற்கு வரக்கூடாது. பூலோகம் போ. கங்கையையே கல்யாணம் செய்துகொள். ஆசையை அனுபவித்து புண்யஞ் செய்து இங்குவா! என்று பிரும்மா சபித்தார். அவரை நமஸ்கரித்துஎப்போதுசாபமோசநமென்று அவன்வேண்டினான்உனக்கு பிடியாத கார்யத்தை அவள் செய்வாள். உனக்கு கோபம்வரும். அப்போதுதான் சாபம் போகும் என்றார்.

4. அரசனும் கங்கையும் பூலோகத்திற்கு வந்தார்கள். வழியில் தேஜஸ்குறைந்துவரும்அஷ்டவசுக்களைப்பார்த்து கங்கை ஏன் கஷ்டப்படுகிறீர்கள் என்று கேட்டாள். அவர்கள்—வஸிஷ்டர்ஸந்த்யாவந்தநம் செய்துக்கொண்டிருந்தார். யாரோஸாமான்ய ரிஷியென்று அவரை லக்ஷ்யம் செய்யவில்லை. பெரியோர்களைக் கண்டவுடன் மரியாதைசெய்து நமஸ்கரிக்கவேண்டுமல்லவா? அப்படி நாங்கள்செய்யவில்லை என்றார்கள்.

5. அவர் பசுவையும்பிடிக்க ஆசைப்பட்டோம். வஸிஷ்டர் எங்களை மனுஷ்யாளாக பிறவுங்கள் என்று சபித்துவிட்டார்; ஆகையால் பூமியில் யாரிடம் பிறக்கலாமென்று யோசித்தோம். நல்லவேளையாக நீ வந்தாய். உனக்கு பூமியில் புருஷனாக வருபவனும் புண்யவான். ஆகையால் எங்களை நீ குழந்தையாகப் பெற்று உடனே கங்கை ஜலத்தில் எறிந்துவிடு என்றார்கள். அப்படியே ஆகட்டும். ஆனால் உங்களை எல்லாரையும் ஜலத்தில் போட்டால் அந்த ராஜாவுக்குக் குழந்தைவேண்டுமே?

6. பாதகமில்லை, எங்கள் அம்சத்தால் ஒரு குழந்தை இருக்கும். ஆனால் அதற்கு ஸந்ததி இராது என்று வஸுக்கள் சொன்னார்கள். பிறகு சந்த்ரவம்சத்தில் பாதன் குலத்தில் ப்ரதீபனென்றோர் அரசன் இருந்தான். அவன் ஒருநாள் கங்கைக் கரையில் ஜபம்செய்துகொண்டிருந்தான். அவன் வலது துடையில் ஏறி உட்கார்ந்துக்கொண்டு ஓர் பெண் என்னைக் கல்யாணம் செய்துக்கொள் என்றது.

7. ப்ரதீபன், இடது துடையில் உட்கார்ந்தால் மனைவி வலது பக்கம் பெண் அல்லது மருமகளுக்கேற்ற இடம். எனக்கு மனைவி இருக்கிறாள். அவளைவிட்டு உன்னை மணப்பது நியாயமில்லை. ஆகையால் மருமகளாக உன்னை ஏற்றுக்கொள்கிறேன் என்றார். கங்கை ஸந்தோஷப்பட்டு நல்லகுணமுள்ளவனே! அப்படியே ஆகட்டும். உன்பிள்ளை, நீயார் என்று என்னைக் கேட்கக்கூடாது.

8. நான் என்னதப்பு செய்தாலும் கோபித்துக்கொள்ளக் கூடாது. அப்படி இருந்தால் அவனைக்கல்யாணம் செய்துகொள்வேன் என்றாள். அரசனுக்கு கிழவயதாய்விட்டது. கடைசி காலத்தில் ஓர்குழந்தைபிறந்தது. காலங்கழித்த பின்னர் சாந்தமானபோது பிறந்ததால்அக்குழந்தைக்குச் சந்தனு என்று பெயர் வைத்தார். அதுவளர்ந்து யுவாவானது.

9. ப்ரதீபன் அவனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம்செய்து வைத்தான். முன்னர் கங்கைசொன்னதைப் புத்ரனிடம் சொன்னான். சந்தனு தர்மம் தவறாமல் முன்னோரைப்போலவே அர

சாண்டுவக்தான். ஒருநாள் வேட்டையாட வநம் சென்றான். அங்கே அழகிய கங்கையைப் பார்த்தான். பிதா சொன்னபடி ஒன்றும் கேட்காமல் அவளைக்கல்யாணம் செய்துகொண்டான்.

ஸ்ரீவத்ஸ வே ஸோமதேவசர்மா.

வாரவிருத்தாந்தம்.

சிறந்த குருபக்தி:— எசையனூர் என்பது வடஆற்காட்டிலுள்ள ஓர் சிருக்ராமம். அங்கு காமகோடி கோகிலாம்பாள் என்ற தார்மிக பெண்மணி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத் குருவை தநுர்மாஸம் பூராவாக அவ்வூரில் வஸிக்கும்படி வேண்டினாள். ஸ்ரீ பரமாசார்யாளின் ஸ்வர்ணபாதுகைகளுக்கு, அஷ்டோத்தர ஸஹஸ்ர நாமார்ச்சனை ரூபாயால் செய்துவைத்தாள், ஸ்ரீ ராமர் உள்ளவிடம் அயோத்யைபோல் ஸ்ரீ ஸ்வாமிகள் உள்ளவிடம் கைலாஸம். ஒருஸமயம் ஸூதஸம்ஹிதை, ஒருஸமயம் தநுர் மாஸ பூஜாவைபவம் சிவாநந்தலஹரீ உபன்யாஸம் நடந்தது. ஆஹா! என்னபாக்யம்.

உடனேசெய்க.— தஞ்சைஜில்லா குற்றாலத்திற்கடுத்த திருவிளக்குடியில் யத்ருச்சையாக பூமியிலிருந்து அழகிய பதினாறு விக்ரஹங்கள் கிடைத்தன. அபூர்வமான இவ்விக்ரஹங்களை அவ்வூர் கோயிலதிகாரிகள் எடுத்துவைத்து சீக்ரத்தில் அவைகளுக்கு கும்பாபிஷேகம் செய்யப்போவதாக அறிகிறோம், விக்ரஹங்கள் வந்து ஆறுமாதம்வரை தக்கபடி ப்ரதிஷ்டைசெய்யப் படாவிடில் தேசத்திற்கு அரிஷ்டமுண்டாகும். ஆதலால் விரைவில் அபிஷேகம் செய்வார்களாக.

மிகவும் அவச்யமானது.— 18உ உடுப்பி க்ஷேத்ரத்தில் ஸ்ரீ க்ருஷ்ணாலயத்தின் அதிகாரம் வழக்கப்படி மற்றோர் மத்வ மடாதிபதியிடம் ஒப்பிவிக்கப்பட்டது. அச்சமயம் திருவாங்கூர் ஸம்ஸ்தாநத்திலிருந்தும் துருஷ்கர்களிடமிருந்தும் காணிக்கைகள்

வந்தன. இவ்வாண்டு பாதிரிகளில் சிலரும் சில மௌலானுக் களும் வந்திருந்தனர். எல்லா மதஸ்தர்களும் ஒன்றுசேர்ந்து அரசாங்கச்சட்டம் மதவிஷயத்தில் தலையிடாமல் காக்கவேண்டு மென்றோர் வாக்கு கிளம்பிற்று. இது அநுஷ்டானத்தில் வர வேண்டுமென்பது வெகுநாளாக நாம் கோரிய ஆசை. க்ருஷ்ண னருளால் அப்படி ஓர் ஸபை ஏற்பட்டு நமக்குள்ள சிறிய பேதங் களைப் பெரிதாக்கி வீண் சண்டை இடாமல் அன்யோன்யமாக இருந்து மதத்தை ரக்ஷிக்கும்படி ப்ரார்த்திக்கிறோம்.

ப்ரசாரவழி: — 24உ சென்னை ஸ்ரீ சங்கரமடத்தில் பத்ரிகை ஆசிரியர் வேண்டுகோளுக்கேற்க, ஓர் ஸபைகூடி யோசித்து கீழ் கொண்ட தீர்மானம் ஏகமநதாக ஏற்கப்பட்டது. 1 ஆர்யதர்மம் பத்ரிகை விருத்தியாக ஒவ்வொரு ஆஸ்திகரும் பல சந்தாதாரர் களைச் சேர்க்கவேண்டும். 2. ஷை பத்ரிகையில் 1. அத்வைதம் 2. தர்மசாஸ்த்ரம். 3. புராணம். 4. உலகவிருத்தாந்தம் என நாலு பாகங்கள் வெளிவரவேண்டும். முதல்பாகத்தில் ஸ்ரீ சங்கரா சார்யாள் எழுதிய ஸ்தோத்ரம் ப்ரகரணம் பாஷ்யம் முதலியவை களில் ப்ரசுரிக்கத் தக்கதைத் தொடர்ச்சியாக நூல் பெயருடன் அவச்யமிருந்தால் ச்லோகத்துடன் வெளிவரவேண்டும். இரண்டில் அவச்யம் ஒவ்வொருவரும் கைப்பற்றத் தக்க ஸதா சாரம் தர்ம ஸந்தேஹநிர்ணயம் 40 ஸம்ஸ்காரங்கள், அதில் விநி யோகமாகும் மந்த்ரார்த்தம், செய்யும் விதம் பயன். முதலிய வைகள் வெளிவரவேண்டும்.

மூன்றில் பதினெட்டு புராணங்களிலிருந்தும் தொடர்ந்து நீதியையும் பக்தியையும் போதிக்கும் கதைகள் வ்ரதங்கள் முதலி யனவும், நாலாவதில் மிகச் சுருக்கமாய் மற்றபத்ரிகைகளை நிறுத்தி இதிலிருந்தே ஸ்தூலமாக உலகஸமாசாரத்தை அறியும்படி விஷ யங்கள் தோற்றவேண்டும். வைதிகத்தில் நம்பிக்கையுள்ள, ஸ்ரீமான்களான *K. S.* ராமஸ்வாமி சாஸ்த்ரிகள். வக்கீல் மஹாலிங்கய்யர்போன்ற லௌகிகர்கள், ப்ரதிவாரம் விஷயதானம் செய்யும்படியும் பல சாஸ்த்ரஜ்ஞர்கள் எழுதும்படியும் ஏற்பாடு செய்யவேண்டும்.

ஆயதிமார்க்கம்: — இதற்கென ஓர் தக்கப்ரசாரகர் ஊரூராகச் சென்று வைதிகவிரோதமில்லாத அட்வர்டைஸ்மெண்ட் வாங்

கியும், சந்தாதாரர் சேர்த்தும், விஷயதானம் பெற்றும், ப்ரசாரம் செய்யவேண்டும். ஸ்ரீ மஹாஸன்னிதானம் அநுக்ரஹம் செய்யும் ஊர்களில் பிக்ஷைசெய்துவைக்கும் ஆஸ்திகர் ஷை பத்ரிகைக்காக ரூபாய் கொடுக்கவேண்டும். அதற்கு உத்தரவளிக்க ஸ்ரீ மஹா ஸன்னிதானத்தை ப்ரார்த்திக்கவேண்டும். ஸ்ரீ மதாசார்ய பக்தரான லௌகிகர்களே இதற்கு மெம்பராகச்சேர்த்து தனிபோர்ட் ஒன்று ஏற்படுத்தவேண்டும்.

ஸ்ரீவத்ஸ. சோமதேவசர்மா.

ஒரு விளம்பரம்.— ஸ்ரீ தனுர்மாஸ பூஜாபாராயண பஜனை களின் ஸமாப்திதினக் கொண்டாட்டவைபவம். ஸ்ரீ காஞ்சீ மண்டலத்தில் க்ஷீரநதியின் தென்கரையில் விளங்கிவரும் பணையூர் என்கிற சிக்கிய தீக்ஷிதபுரம் அக்ரஹாரத்தில் நடந்தேறிய தனுர் மாஸ பூஜா பஜன பாராயணாதிகள் பிரஜோத்பத்திவருஷம் தை-மீ 4௳ (17-1-32) ஞாயற்றுக்கிழமைதினம் பூர்த்திசெய்யப்பட்டது நிகழ்ச்சி விபரம் 16-1-32 ஸ்திரவாரம் இரவு 7-மணிக்கு ருக்மணி தேவியாரால் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு எழுதியனுப்பட்ட ஸ்வயம்வர பத்திரிகையில் அடங்கியிருக்கும் விஷயத்தைப்பற்றி உபந்யாஸம் நடந்தேறியது. 17-1-32 ஞாயிற்றுக்கிழமை விடியற் காலம் 4½-மணிக்கு பஜனைகோஷ்டிகளுடன் கிராமபிரதக்ஷிணமும் காலை 7½-மணிக்கு ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு திவ்யஸஹஸ்ரநாமமும் பகல் 12-மணிக்கு திவ்யமான பிராம்மண ஸந்தர்ப்பணையும்பகல்-3 மணிக்கு பஜனைகோஷ்டிகளுடன் பஜனையும் ஸாயங்காலம்பகவானு க்குஸஹஸ்ரநாம வைபவமும் அன்று இரவு ருக்மணிதேவியின் விவாஹ மஹோத்ஸவத்தைப்பற்றி அரிய பண்டித சிகாமணியால் பாமரர்களுக்கும் மனதில் பதியும்படி உபன்யாஸமும் அப்போது வந்திருந்த வித்வான்களுக்கும் பக்தகோடிகளுக்கும் மஹாஜனங் களுக்கும் ஸ்ரீ கோபாலகிருஷ்ண திவ்யபிரஸாதம்வழங்கி பூர்த்தி செய்யப்பட்டது.

இப்படிக்கு

பணையூர் பக்தகோஷ்டி பிராம்மண மஹாஜனங்கள்.